# இயல் 5

## செய்யுளியல் - மரபியல்

செய்யுள் உறுப்புகள் - விளக்கம், மாத்திரை - அசைகள் - விளக்கம் - சான்றுகள், சீர் - விளக்கம் சான்றுகள், அடி - விளக்கம் சான்றுகள், தொடை - விளக்கம் சான்றுகள், யாப்பு - விளக்கம் - மரபு, தூக்கு விளக்கம் - வெண்பா, வஞ்சிப்பா, ஆசிரியப்பா, மருட்பா, கலிப்பா - விளக்கம். தொடை விளக்கம் சான்றுகள் வாயுறை வாழ்த்து, அடங்கியல் - செவியறை - அங்கதம் விளக்கங்கள் - மரபு - தொகுப்பினை விளக்கங்கள் நூல் விளக்கம் - நூலின் வகைகள் - விளக்கங்கள் காவை, சூத்து, பற்றிய செய்திகள். விளக்கங்கள் வண்ணம் - விளக்கங்கள் ; உத்தியின் வகைகள் விளக்கங்கள்.

# 8. செய்யுளியல்

## 1. செய்யுள் உறுப்புக்கள்

செய்யுள் இலக்கணம், பாட்டு அமைப்பு, பா வகைபற்றிக் கூறும் இயல் செய்யுள் இயல்.

### செய்யுள் உறுப்புக்கள்

'மாத்திரை, எழுத்து இயல், அசை வகை, எனாஅ;
யாத்த சீரே, அடி, யாப்பு, எனாஅ;
மரபே, தூக்கே, தொடை வகை, எனாஅ;
நோக்கே, பாவே, அளவு இயல், எனாஅ;
திணையே கைகோள், கூற்றுவகை, எனாஅ;
கேட்போர், களனே, கால வகை, எனாஅ;
பயனே, மெய்ப்பாடு, எச்ச வகை, எனாஅ;
முன்னம், பொருளே, துறை வகை, எனாஅ;
மாட்டே, வண்ணமொடு, யாப்பு இயல் வகையின்
ஆறு தலை இட்ட அந் நால் - ஐந்தும் -
அம்மை, அழகு, தொன்மை, தோலே,
விருந்தே, இயைபே, புலனே, இழைபு, எனாஅ;
பொருந்தக் கூறிய எட்டொடும் தொகைஇ-
நல் இசைப்புலவர், 'செய்யுள் உறுப்பு' என
வல்லிதின் கூறி, வகுத்து உரைத்தனரே. 1256

மாத்திரை அளவு, எழுத்துக்கள் தொகுதி, அசை உறுப்பு, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவுஇயல், திணை, கைக்கோள், கூற்று, கேட்போர், களம், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், வகை, துறை, மாட்டு, வண்ணம் என்னும் இருபத்து ஆறும் (ஆறுதலையிட்ட அந் நால் ஐந்து (6+4x5 = 20 = 26)) இருபத்து ஆறும், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு,

## 2. மாத்திரை

**அவற்றுள்**
**மாத்திரை அளவும் எழுத்தியல் வகையும்**
**மேல் கிளந்தன்ன என்மனார் புலவர்.** 1257

அவற்றுள் - மேலே சொன்ன செய்யுள் உறுப்புக்களுள், மாத்திரை அளவு, எழுத்து வகை என்னும் இரண்டும் எழுத்ததிகாரத்தில் கூறப்பட்டுள்ள படியே என்பர் புலவர் பெருமக்கள்.

# 3. அசை

## நேர் - நிரை

**குறிலே நெடிலே குறில் இணை குறில் நெடில்**
**ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி**
**நேரும் நிரையும் என்றிசின் பெயரே.** 1258

குறிலும், நெடிலும், தனித்தும், குறிலோடு குறில் (இரண்டு குறில்) இணைந்தும், குறிலை அடுத்து நெடில், அல்லது அவை ஒற்றடுத்து வரும்போது, அதன் உண்மை இயல்பை நோக்க (மெய்ப்பட நாடி), அவை நேரசை என்றும் நிரை அசை என்றும் பெயர் பெறும்.

**இருவகை உகரமொடு இயைந்தவை வரினே**
**நேர்பும் நிரையும் ஆகும் என்ப**
**குறில்இணை உகரம் அல்வழி யான.** 1259

'குற்றியலுகரம்', 'முற்றியலுகரம்' என்னும் இரண்டு வகையான உகரத்தோடு, நேர் அசையும், நிரை அசையும் சேர்ந்து வரும்போது, (இயைந்தவை வரின்) அவை நேர்பசை நிரைபு அசை என்றழைக்கப் பெறும் (என்ப) இந்த இரண்டு வகை உகரமும் குறிலோடு பொருந்தி வராத இடத்து இது விதியாகும். அப்போது அது நேர்பசை ஆகாது. அல்வழி - அல்லாத இடத்து.

## இயல் அசை உரி அசை

**இயல் அசை முதல் இரண்டு ஏனைய உரிஅசை.** 1260

முதலிரண்டான 'நேர் அசை, நிரை அசை' என்னுமிரண்டும் இயல் அசை எனப்படும். ஏனைய - மற்றதான நேர்பு, நிரைபு அசைகள் இரண்டும் உரி அசை ஆகும்.

## 4. சீர்

**ஈர் அசை கொண்டு மூ அசை புணர்த்தும்**
**சீர் இயைந்து இற்றது சீர் எனப்படும்.** 1266

இரண்டு அசை கொண்டு இணைந்தும், மூன்றசையோடு சேர்ந்தும் சொற்கள் ஓசை பொருந்த வருவது சீர் எனப்படும்.

### இயற்சீர் - உரிச்சீர்

**இயலசை மயக்கம் இயற்சீர் ஏனை**
**உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்.** 1267

இயலசை இணைந்து வருவது இயற்சீர் ஆகும். உரி அசை சேர்ந்து வருவது உரிச்சீர் எனப்படும். நேர் நேர், நிரை நேர், நிரைநிரை. நேர்நிரை - இயற்சீர். நேர்பு நேர்பு, நிரைபு நேர், நிரைபு, நிரைபு, நேர் நிரைபு - ஆசிரிய உரிச்சீர்.

**எ.கா :** வாய்க்கால். வரகு சோறு

**முன்நிரை உறினும் அன்ன ஆகும்.** 1268

நேர்பு அசை, நிரைபு அசை,க்குப் பின்வரும் நிரை அசையும் ஆசிரிய உரிச்சீர் ஆகும்.

**எ.கா :** குளத்துமடை.

**நேரவண் நிற்பின் இயற்சீர் பால.** 1269

உரி அசைக்குப் பின்னே நேர் அசை வருமானால் அது இயற்சீர் இயல்பினைப் பெறும்.

**எ.கா :** ஆற்றுக்கால்

## 5. அடி

**நாற்சீர் கொண்டது அடி எனப்படுமே.** 1286

நான்கு சீர் (நாற்சீர்) இணைந்து வருவது செய்யுள் அடி என்று சொல்லப்படும்.

## தொடை

**அடி உள்ளனவே தளையொடு தொடையே.** 1287

ஒரு செய்யுள் அடியில் தளையும் தொடையும் இருக்கும்.

## தளையும் தொடையும்

**அடி இறந்து வருதல் இல் என மொழிப.** 1288

இந்தத் தளையும் தொடையும் நான்கு சீர்ச் செய்யுளடிகளில் வருவதன்றி, அதை நீங்கி வருவது இல்லை என்று சொல்வர்.

## ஆசிரியத் தளை

**சீர் இயை** மருங்கின் **ஓர் அசை** ஒப்பின்
**ஆசிரியத் தளைஎன்று அறியல்** வேண்டும். 1308

சீர் இயை மருங்கின் - சீர் பொருந்தி நிற்க அதாவது ஈற்றசை பொருந்த வருஞ்சீரின் முதலசையோடு ஒத்து நின்றால் அது ஆசிரியத்தளை என்று அறிந்து கொள்ள வேண்டும். நிலைமொழி இயற்சீரோடு வருமொழியின் முதலசை நேராய் ஒன்றினால் அது நேரொன்றாசிரியத்தளை. நிரையாய் ஒன்றுமானால், அது நிரை ஒன்றாசிரியத்தளை.

## வஞ்சித்தளை

**குறள் அடி முதலா அளவடி காறும்**
உறழ்நிலை இலவே வஞ்சிக்கு **என்ப.** 1309

குறள்அடி முதலாக அளவடி ஈறாக வஞ்சி உரிச்சீர் வந்து திரியும் நிலையில், இயற்சீரும், ஆசிரிய உரிச்சீரும் ஆகும். உறழ்தல் - திரிதல்.

## வெண்பா

அளவும் **சிந்தும் வெள்ளைக்கு உரிய**
**தளை வகை ஒன்றாத் தன்மையான.** 1310

அளவடியும், சிந்தடியும் வெண்பாவுக்கு உரியவாம், அங்கு தளைவகை பொருந்தி வராததினால், பொருந்தி நெடிலடி சில வரும் என்பர். வெள்ளை - வெண்பா.

## கலிப்பா

**அளவடி மிகுதி உளப்படத் தோன்றி**
**இரு நெடில் அடியும் கலியிற்கு உரிய** 1311

## மோனைத் தொடை

**அடிதொறும் தலை எழுத்து ஒப்பது மோனை** 1343

செய்யுள் அடி ஒவ்வொன்றிலும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனைத் தொடை.

## எதுகைத் தொடை

**அஃது ஒழித்து ஒன்றின் எதுகை ஆகும்** 1344

அஃது ஒழித்து - அதாவது அடிதோறும் முதல் எழுத்து ஒன்றாது இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.

**எ.கா :** மாயோன் மேயகாடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்

(தொல்காப்பியம்)

## கிளை எழுத்துக்கள்

**ஆஇரு தொடைக்கும் கிளை எழுத்து உரிய** 1345

ஆஇருதொடை - அந்த இரண்டு தொடை. அதாவது முன் சொன்ன மோனைத் தொடை எதுகைத் தொடை இரண்டிற்கும், முதல் எழுத்தும் இரண்டாம் எழுத்தும் முன்னிரு சூத்திரங்களில் சொல்லியபடி ஒன்றி வருவதே அல்லாமல் இன எழுத்துக்கள் ஒன்றி வருதற்கும் உரியன. அஆஐ, இஈஎ, உ, ஊ, ஓ; இவை ஒன்றுக்கொன்று இன எழுத்துக்களாம்.

## முரண்தொடை

**மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே.** 1346

சொல், பொருள் மாறுபட வரும் செய்யுள் அடி முரண்தொடை ஆகும்.

## 18. வண்ணம்

**வண்ணம் தானே நால் ஐந்து என்ப.** 1459

வண்ணம் - இசைப்பாட்டு. இது இருபது வகைப்படும்.

### அவற்றின் பெயர்

**அவைதாம்**
**பா அ வண்ணம் தா அ வண்ணம்**
**வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்**
**இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்**
**நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்**
**சித்திர வண்ணம் நலிபு வண்ணம்**
**அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்**
**ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்**
**எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்**
**தூங்கல் வண்ணம் ஏங்கல் வண்ணம்**
**உருட்டு வண்ணம் முடுகு வண்ணம் என்று**
**ஆங்கு என மொழிப அறிந்திசி னோரே.** 1460

பா அ வண்ணம் தொடங்கி முடுகு வண்ணம் முடிய உள்ள இவ்விருபதுமே, வண்ணங்களின் தொகையும் வகையும் எனக் கூறுவர் இலக்கணம் அறிந்தோர்.

# மரபியல்

பொது மரபு - இளமைப் பெயர்கள், ஆண்பால் பெயர்கள், பெண்பால் பெயர்கள் - விளக்கம் சான்றுகள். மற்றமும் உண்டு என்பவை. உயிர்ப் பகுப்பு ஓர் அறிவு முதல் ஆறறிவு வரை பகுப்பு முறைகள் மரபு மீறிய நிலைகள். அரசர், அந்தணர் இவர்களுக்கு உரிய கடமைகள். அடையாளங்கள் - வணிகர், வேளாளர் இவர்களின் கடமைகள் - அடையாளங்கள் அல், மரங்கள் உறுப்புகள் - விளக்கம் - நூல் பற்றிய செய்திகள். உரைகள் பற்றிய விளக்கங்கள் இருபத்திரண்டு உத்திகள் - விளக்கங்கள்.

# 9. மரபியல்

## 1. பொது மரபு

செய்யுள் இலக்கணத்தில் மரபெனச் சொல்லப்படுவது போல, மனிதர் விலங்கு பறவைகள் பெயர் மரபு விளக்கும் இயல், மரபியல் எனப்பட்டது.

### இளமைப் பெயர்கள்

**மாற்ற அரும் சிறப்பின் மரபு இயல் கிளப்பின்**
**பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்**
**கன்றும் பிள்ளையும் மகவும் மறியும் என்று**
**ஒன்பதும் குழவியொடு இளமைப் பெயரே.** 1491

மாற்ற அரும் சிறப்பு - விலக்க முடியாத அல்லது மாற்றுதற்கு அரிதான அதாவது, இன்றியமையாச் சிறப்புடைய மரபிலக்கணத்தைச் சொல்லின்; (கிளப்பின்) பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி மற்றும் குழவி என்பதொடு இளமைப் பருவம் குறிக்கும் பெயர்கள் ஒன்பதாம்.

### ஆண்பால் பெயர்கள்

**எருதும் ஏற்றையும் ஒருத்தலும் களிறும்**
**சேவும் சேவலும் இரலையும் கலையும்**
**மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்**
**போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்**
**யாத்த ஆண்பால் பெயரென மொழிப.** 1492

எருது, ஏற்றை, ஒருத்தல், களிறு, சே, சேவல், இரலை, கலை, மோத்தை, தகர், உதள், அப்பர், போத்து, கண்டி கடுவன்; என்னும் பதினைந்தும் இன்னும் இதுபோல் வரும். மற்றனவும், நூலறி புலவர் தொகுத்த ஆண்பால் பெயர்கள் என்று சொல்லுவர் 'ஏற்று' என்றும் பாடம் உண்டு.

## பெண்பால் பெயர்கள்

பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்
மூடும் நாகும் கடமையும் அளகும்
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்
அந்தம் சான்ற பிடியொடு பெண்ணே. 1493

பேடை, பெடை, பெட்டை, பெண், மூடு, நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணை, பிணவு, பிடி என முடிகின்ற பதின்மூன்றும் பெண்பால் பெயர்களாம். 'அந்தம் சான்ற' என்பதற்கு முடிவை உடைய என்பதே நேரான பொருளெனினும் அந்தம் சான்ற என்பதற்கு அழகு பொருந்திய பிடி என்றும் பொருள் கூறுவர். அந்தம் - முடிவு. ஆதி அந்தம் - முதலும் முடிவும். பொருள் - மரபியல். அந்தம் இலான் வரக் கூவுவாய் - திருவாசகம். 'அந்தமில் புகழ் ஆரூர் அறநெறி' - அப்பர் தேவாரம்.

## 3. உயிர்ப் பகுப்பு

ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே
இரண்டு அறிவதுவே அதனொடு நாவே
மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே
ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே. 1517

ஒன்றறிவதுவே - ஓர் அறிவு உடை உயிர் என்பது, உற்று அறிவதுவே - தன் உடல் உணர்வு கொண்டு அறிவது. புல், மரம், தாமரை, அனிச்சம், (மோப்பக் குழையும்) தொட்டால் சுருங்கி இவை ஓரறிவுடையன. இரண்டறிவுடைய உயிர் என்பது, உடலாலும், நாவாலும் உணர்ந்தறிவது. சங்கு நத்தை போன்றவை. மூன்றறிவுடைய உயிர் என்பது உடலாலும், நாவாலும் மூக்கால் முகர்ந்தும் அறியும் தன்மையும் கொண்ட

இவ்வியல் தொடர்பான கருத்துக்களையும்
விளக்கங்களையும் பாடப்புத்தகத்தில் பார்க்க.